**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.93/2025**
**Sessions :**
**Deposition of Witness for :PW 3 LW10**

| | |
|---|---|
| Name | திரு.பாலமுருகன் |
| Father's/Husband Name | திரு.சுப்ராயன் |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 10th day of August, 2026**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சித்தாமூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜா என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. மேற்படி உதவி ஆய்வாளர் கடந்த 13.09.2024 அன்று மேற்படி காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜா காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது சதிஷ்குமார், த/பெ.பொன்னுசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.233/2024, இ.த.ச. 126(2), 296(பி), 181(1), 351(3) பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த புகார் மனு**

**அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. மேற்படி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன் மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. புகார்தாரர் சதிஷ்குமார் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 7 வரையான மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான மணிகண்டன் மற்றும் மூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மதுராந்தகம் மருத்துவர் சசிரேகா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி மருத்துவர் பதிவு செய்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கின் எதிரிகளான வேலு, கார்த்திக் மற்றும் செல்வம் ஆகியோரை 13.09.2024 அன்று காலை 11.00 மணிக்கு தொன்னாடு கூட்ரோடு அருகே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கின் மற்றொரு எதிரியான ஞானவேல் என்பவர் செங்கல்பட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை சென்றுள்ளார். வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது 05.10.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

4. நான் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும்

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தவறான புகாரை பெற்று சம்பவம் இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.